கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 328/2021**
திரு. சபரி (P.W.-2) **7.4.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் என்ன என்றால் ராமசாமி. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு ராமசாமி எப்போது சென்று பார்த்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ராமசாமியிடம் ஒரு லட்ச ரூபாய் கடன் வாங்குவதற்காக நேரில் சென்ற தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. கடன் கேட்டு சென்ற பிறகு எந்த தேதியில் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர் ராமசாமி எங்களுக்கு எப்படி தெரியும் என்றால் சின்னம்மாள் என்பவர் எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். கடன் வாங்குவதற்காக சின்னம்மாவை எப்போது பார்த்தோம் என்று சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. வாதிகள் அனைவரும் தனித்தனியாக வெவ்வேறு விலாசத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரி. ஒரு லட்சம் கடன் வாங்கியதாக சொல்லி உள்ளோம் வாதிகளில் யாருக்கு அந்த கடன் தேவைப்பட்டது என்றால் என்னுடைய பெற்றோர்கள் தான் கடன் வாங்கினார்கள்.

2. தாவா சொத்துக்கான கிரைய ஆவணம் யார் பெயரில் இருந்தது என்றால் என்னுடைய அப்பா பெயரில் இருந்தது. கிரைய ஒப்பந்த ஆவணம் என்று தெரிந்து தான் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரி. 22.4.2019 ஆம் தேதி

கடன் தொகையை திருப்பிக் கொடுத்த போது அதற்கு ஆதரவாக ரசீது ராமசாமி இடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்றால் ஆமாம். கடன் தொகையை ராமசாமியிடம் திருப்பி கொடுத்தோம். கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து கடன் தொகையை திருப்பிக் கொடுத்ததாக சொல்லும் தேதி வரை எவ்வளவு வட்டி கணக்கிட்டு கொடுத்தீர்கள் என்றால் மொத்தமாக கொடுத்தோம். அந்த தொகையில் அசல் தொகை என்ன வட்டி எவ்வளவு என்ன என்றால் தெரியாது. கடன் தொகையை திருப்பி செலுத்திய போது கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொள்வதாக ராமசாமியிடம் ஆவணம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரி. 22.4.2019 ஆம் தேதி கூறிய தமிழ் வருடம், மாதம், கிழமை தெரியுமா என்றால் தெரியாது.

3. என்னுடைய தாயார் இறப்பதற்கு முன்பு எப்போது சென்று பணத்தை திருப்பி செலுத்தி விடுவதாக பேசினீர்கள் என்றால் மூன்று மாதத்திற்கு முன்பு பேசினோம். வழக்கறிஞர் அறிவிப்பில் 22.4.2019 ஆம் தேதி தொகையை திருப்பி செலுத்தி விட்டதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் எனக்குத் தெரியாது. ராமசாமி இறந்த பிறகு அவருடைய மனைவியை எப்போது சென்று வழக்கு சம்பந்தமாக பார்த்தீர்கள் என்றால் ராமசாமி இறந்து ஒரு மாதம் கழித்து சென்று பார்த்தோம். 1ம் பிரதிவாதியை பார்த்த பிறகு எத்தனை மாதங்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் ஆறு மாதம் கழித்து பார்த்தோம். ராமசாமியின் இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவை ஆன்லைனில் எடுத்தீர்களா என்றால் இல்லை. ராமசாமி வீட்டில் கொடுத்தார்கள்.

4. ராமசாமியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்தி விட்டு தாவா சொத்துக்கு உரிய அசல் ஆவணங்களை பெற்றுக் கொண்டதாக சொல்வதே தவறு என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர் மணிகண்டன் ஏன் 3ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளீர்கள் என்றால் எங்களுக்குள் பிரச்சனை உள்ளதால் அவரை 3ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளோம். தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரத்திற்காக போடப்பட்டது. கடனுக்காக ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி இறந்த பிறகு பொய்யான காரணங்களுடன் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் பொய் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.07 18:31:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.